அமைச்சுச் சுற்றறிக்கை இல.: 03/2010

எனது இல. 02/06/04/01TT(Vol-ii)
2010.10.06

பொலிஸ் மா.அதிபர்,
காடு பேணலதிபர்,
மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள்,
புகையிரத பொது முகாமையாளர்.

**வெட்டு மரங்களை ஏற்றிச் செல்வதற்கான உரிமப் பத்திரங்களை வழங்குதல்**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள **06/02/05/** தொகுதி III ஆம் இலக்க 1996.12.06 ஆம் திகதிய அமைச்சுச் சுற்றறிக்கை இலக்கம் 17/96 இன் பின்வரும் பந்திகள் உடனடியாக நடைமுறைக்கு வருகின்றவாறு திருத்தப்படுகின்றன.

I. 17/96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் 4.1.7 ஆம் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தி 4.1.8 என்றவாறு சேர்த்துக்கொள்ளப்படுகின்றது.

4.1.8 வரையறுக்கப்பட்ட (தடை செய்யப்பட்ட) வகைகளுக்குரிய ஹல்மில்ல மற்றும் வேம்பு ஆகிய வகைகளில் இரண்டுக்கு மேற்படாத மரங்களிலிருந்து பெறப்பட்ட குற்றிகள் அல்லது அத்தகைய குற்றிகளிலிருந்து அறுக்கப்பட்ட வெட்டு மரங்கள் அல்லது அத்தகைய வெட்டு மரங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட யன்னல் சட்டங்கள், யன்னல் கதவுகள், நிலைச் சட்டங்கள், கதவுகள் ஆகியவற்றை ஏற்றிச் செல்வதற்கு உரிமப் பத்திரங்களை வேண்டிநிற்கின்ற போது, உரிய கிராம அலுவலரின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பிரதேச செயலாளரால் உரிமப் பத்திரம் வழங்கப்படலாம். எனினும், உரிய பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தினுள் ஏற்றிச் செல்வதற்கு வேண்டப்பட்டுள்ள மர வகை வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயிரிடப்பட்டுள்ளதாயிருப்பின் அல்லது ஏற்றிச் செல்ல வேண்டப்பட்டுள்ள மர வகையை அடையாளம்காண முடியாதுள்ளபோது அல்லது மரங்கள் வெட்டப்பட்டுள்ள காணியின் எல்லையில் அரச காணியொன்று உள்ள சந்தர்ப்பத்தில் மட்டும் வீச்சிடை வன உத்தியோகத்தரின் சிபாரிசு பெறப்படுதல் வேண்டும்.

II. 17/96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 வது பந்தியின் 5.1, 5.2 மற்றும் 5.5 பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் 5.1 மற்றும் 5.2 பந்திகள் பதிலீடு செய்யப்படுகின்றன.

5.1 வரையறுக்கப்பட்ட (தடை செய்யப்பட்ட) வகைகளல்லாத இரண்டுக்கு மேற்படாத மரங்களிலிருந்து பெறப்பட்ட குற்றிகள் அல்லது அத்தகைய குற்றிகளிலிருந்து அறுக்கப்பட்ட வெட்டு மரங்கள் அல்லது அத்தகைய வெட்டு மரங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட யன்னல் சட்டங்கள், யன்னல் கதவுகள், நிலைச் சட்டங்கள், கதவுகள் ஆகியவற்றை ஏற்றிச் செல்வதற்கு உரிமப் பத்திரங்களை வேண்டிநிற்கின்ற போது, உரிய கிராம அலுவலரின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பிரதேச செயலாளரால் உரிமப் பத்திரம் வழங்கப்படலாம். எனினும், உரிய பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தினுள் ஏற்றிச் செல்வதற்கு வேண்டப்பட்டுள்ள மர வகை வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் பயிரிடப்பட்டுள்ளதாயிருப்பின் அல்லது ஏற்றிச் செல்ல வேண்டப்பட்டுள்ள மர வகையை அடையாளம்காண முடியாதுள்ளபோது அல்லது மரங்கள் வெட்டப்பட்டுள்ள காணியின் எல்லையில் அரச காணியொன்று உள்ள சந்தர்ப்பத்தில் மட்டும் வீச்சிடை வன உத்தியோகத்தரின் சிபாரிசு பெறப்படுதல் வேண்டும்.

5.2 வரையறுக்கப்பட்ட (தடை செய்யப்பட்ட) வகைகளல்லாத மூன்று அல்லது அதற்கு மேற்படாத மரங்களிலிருந்து பெறப்பட்ட குற்றிகள் அல்லது அத்தகைய குற்றிகளிலிருந்து அறுக்கப்பட்ட வெட்டு மரங்கள் அல்லது அத்தகைய வெட்டு மரங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட யன்னல் சட்டங்கள், யன்னல் கதவுகள், நிலைச் சட்டங்கள், கதவுகள் ஆகியவற்றை ஏற்றிச் செல்வதற்கு உரிமப் பத்திரங்களை வேண்டிநிற்கின்ற போது, உரிய கிராம அலுவலரின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பிரதேச செயலாளரால் உரிமப் பத்திரம் வழங்கப்படலாம்.

ஆர்.எச்.எஸ். சமரதுங்க
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

பிரதிகள்: (கவனத்திற்கு)

01. சனாதிபதியின் செயலாளர்
02. பிரதம அமைச்சரின் செயலாளர்
03. அமைச்சரவைச் செயலாளர்
04. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
05. ஏனைய அனைத்து அமைச்சுச் செயலாளர்கள்,
06. மாகாண சபை அமைச்சுச் செயலாளர்கள்
07. மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
08. மாகாண ஆளுநரின் செயலாளர்கள்
09. காணி ஆணையாளர் நாயகம்
10. நில அளவையாளர் நாயகம்
11. உரித்து நிர்ணய ஆணையாளர்
12. பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபை
13. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்
14. மாகாண காணி ஆணையாளர்கள்
15. இராணுவத் தளபதி
16. விமானப் படைத் தளபதி
17. கடற்படைத் தளபதி
18. தலைவர், இலங்கை துறைமுக அதிகார சபை
19. தலைவர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
20. தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை
21. மாவட்ட வன உத்தியோகத்தர்
22. கணக்காய்வாளர் நாயகம்